# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.61 /2015**

திரு. M. வெங்கடேசன்
த/பெ முருகேச கவுண்டர்
சேரானூர் கிராமம்,
கோணை அஞ்சல்,
செஞ்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் ........மேல் முறையீட்டாளர்
(திரு K. குமார்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் அவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602. ......... எதிர்மனுதாரர்
(திரு. T.குணசேகரன், செயற்பொறியாளர்/செஞ்சி )

**கேட்புரை நாள்: 27–10–2015**

**ஆணை நாள் : 23–11–2015**

திரு. M. வெங்கடேசன் த/பெ முருகேச கவுண்டர், சேரானூர் கிராமம், செஞ்சி வட்டம், அவர்களின் 27.7.2015 நாளிட்டமனு மேல் முறையீட்டுமனு எண்.61/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 27.10.2015 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான சர்வே எண்.133/4ஏ—ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் அவருடைய தயார்நிலையை பதிவு செய்யாமலிருப்பதற்கு காரணமான அலுவலர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்

2.1 மேல்முறையீட்டாளர் சிறுணாம்பூண்டி கிராமம் சர்வே எண்.133/4ஏ—ல் உள்ள நிலத்தை திரு.பச்சைமுத்து அவர்களிடமிருந்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். மேற்கண்ட நிலத்திலுள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு கோரி திரு பச்சைமுத்து அவர்கள் விண்ணபத்தை ஏற்கெனவே பதிவு செய்துள்ளார்கள். அதன் பதிவு எண்.002/22.4.1987 ஆகும்.

2.2 மேற்கண்ட விண்ணபத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய 90 நாள் நோட்டீஸ் 31.3.2009ல் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பின்படி தயார்நிலை 8.7.2009க்குள் பதிவு செய்யப்படவேண்டும்.

2.3 மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளதால் திரு. பச்சைமுத்து பெயரில் பதிவு செய்யப்பட்ட விண்ணபத்தை அவரின் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று விண்ணப்பம் சமர்ப்பித்து பெயர்மாற்றம் 7.1.2010 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

2.4 அவருடைய விண்ணப்பம் 90 நாட்கள் நோட்டிஸ் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் வரை தயார் நிலையை பதிவு செய்யவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று 12.6.2014 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு விட்டது.

2.5 மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் அனுமதி அளிக்கப்பட்ட பிறகு தயார்நிலையை பதிவு செய்ய ஆவணங்களை இளம் பொறியாளர் அலுவலகத்தில் அளித்ததாக தெரிவித்து தனக்கு விவசாய மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று விழுப்புரம் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் அவருடைய மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. எனவே, மேற்கண்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 விழுப்புரம் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 1.7.2015 அன்று தெரிவித்துள்ளது அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**6.** <u>முடிவுரை :</u>*

*__6.1__ மனுதாரர் ஐந்து ஆண்டுக்குள் தன்னுடைய தயார் நிலையை மின்வாரியத்திற்கு தெரிவித்ததற்குண்டான ஆதாரம் ஏதும் இருந்தால் அதன் அடிப்படையில் மனுவின் பேரில் முடிவு செய்யலாம் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.*

*__6.2__ ஆனால், மனுதாரர் மின்வாரியத்திற்கு ஆவணங்கள் கொடுத்ததற்கான எந்தவித ஆதாரத்தையும் கொடுக்க இயலவில்லை. தன் விட்டு பாகப்பிரிவினையின்போது தன்வீட்டு ஆவணங்கள் தவறிவிட்டதாக மட்டுமே தெரிவிக்கிறார்.*

*__6.3__ மேலும், மின்வாரியத்தில் மனுதாரர் தன் தயார் நிலையை தெரிவிக்க கொடுத்ததாகக் கூறும் எந்த ஆவணங்களும் இல்லை.*

*__6.4__ எனவே, தயார் நிலை ஆவணம் எதுவும் மனுதாரர் ஐந்தாண்டுக்குள் கொடுத்துள்ளதாக கூறுவதை மெய்ப்பிக்க ஆதாரம் ஏதும் இல்லாத நிலையில் மின்வாரிய விதிமுறைகளின்படி மனுதாரரின் விண்ணப்பம் ரத்து செய்ததை மறு பரிசீலனை செய்ய முடியாது என இம்மன்றம் முடிவு செய்கிறது.*

*__6.5__ மேற்கண்ட முடிவுடன் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண்.**4/2015** இறுதி முடிவிற்கு கொண்டு வரப்படுகிறது."*

## 4. மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள்

4.1 அவர் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கோணை அஞ்சல், சேரானூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி. அவர்கள் ஊரைச் சேர்ந்த திரு. பச்சை முத்து கவுண்டர் அவர்கள் 22.4.1987 சிறுணாம்பூண்டி கிராம சர்வே எண்.133/4ஏக்குண்டான கிணற்றுக்கு மோட்டார் சர்வீஸ் பெற செஞ்சி கோட்ட அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார். அதன் அடிப்படையில் அவரது பெயருக்கு 90 நாள் நோட்டீஸ் 31.3.2009ல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன்படி 8.7.2009ல் தயார் நிலை பதிவு செய்யப்பட வேண்டும்.

4.2 மேற்படி 90 நாள் நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்னரே அவர் திரு. பச்சைமுத்து கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்று நிலபுலன்களை அனுபவித்து வருகிறார். அதன் அடிப்படையில் திரு. பச்சைமுத்து அவர்கள் தனக்கு வழங்கிய 90 நாள் நோட்டீசினைப் பெற்று அவரை சர்வீஸ் வாங்கிப் பயனடையுமாறு அவரிடம் சேர்த்துவிட்டார்.

4.3 அவரும் உடனடியாக சிட்டாம்பூண்டி உதவி மின்பொறியாளர் அவர்களை உரிய சொத்து பத்திரத்துடன் அவரது அலுவலகத்தில் சந்தித்து முறையிட்டதின் பேரில் அங்கிருந்த அலுவலக ஊழியர் திரு. தன்சிங் என்பவரிடம் பெயர் மாற்றுவதற்கான இதர ஆவணங்களை அவர் அளிக்கப்படவேண்டியவை எவை என அவரிடம் தெரிவிக்குமாறு சொன்னார். அதன்படி திரு தன்சிங் கேட்ட எல்லா ஆவணங்களையும் சேர்த்து விட்டார். அன்றே தன்சிங் மேற்படி பெயர்மாற்றத்துக்காக அவரிடம் வற்புறுத்தி ரூ.1000/. வாங்கி கொண்டார்.

4.4 பின்னர் 15 தினங்கள் கழித்து இளமின் பொறியாளர் திரு.தன்சிங்கை அழைத்து வந்து அவரது கிணற்றைப் பார்வையிட்டு சென்றார். அன்றும் தன்சிங் மீண்டும் ரூ.500/– கேட்டு வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் அவரது பெயர் மாற்றம் 7.1.2010ல் செய்யப்பட்டுவிட்டது.

4.5 அதன் பின்பு தயார் நிலையினைப் பதிவு செய்யச் சொல்லி ஒரு 3HP மோட்டார் பில் வாங்கி வரச் சொன்னார். தன்சிங் கூறியபடியே மோட்டார் பில்லையும் சேர்த்துவிட்டார். அதே நாளில் டைப் செய்த அக்ரிமெண்ட்டில் அவரது கையொப்பம் சுருக்கொப்பம் பெற்றுக் கொண்டு

உதவி மின்பொறியாளரிடம் காட்டி தயார்நிலையினை தானே பதிவு செய்து கொள்வதாக கூறி அனுப்பிவிட்டார்.

4.6 மேற்படி பெயர் மாற்றத்துக்காக திரு. தன்சிங் அவர்கள், வட்டாட்சியரிடம் கிணறு சான்று வாங்கி வரச் சொல்லியிருந்தார். அதை பெற்றுச் சேர்க்கும்பொழுது இன்னுமொரு ரூ.1000 கேட்டிருந்தார். அதை கொடுக்க அன்று அவரிடம் வசதியில்லை. இதை மனதில் வைத்துக்கொண்டே அவரது தயார்நிலையினை பதிவு செய்துவிட்டதாகவும் அக்ரிமெண்ட்டும் செய்துவிட்டதால் அவரது வரிசை வரும்போது நேரில் அழைத்து இணைப்பு கொடுத்து விடுவோம் என பலமுறை சொல்லி திருப்பி அனுப்பிவிடுவார்.

4.7 காலக்கிரமத்தில் அவருக்கு பின்னர் மோட்டார் எடுத்து பதிவு செய்தவர்கள் சர்வீஸ் பெற்ற போதுதான் அவரது தயார்நிலையினை பதிவு செய்யாது தன்சிங் ஏமாற்றிவிட்டது தெரிய வந்தது.

4.8 அவர் சற்றும் மனம் தளராமல் இது தொடர்பாக செஞ்சி செயற்பொறியாளரை சந்தித்தபோதெல்லாம் 90 நாள் நோட்டீஸ் காலம் 5 ஆண்டுகள் முடிந்துவிட்டது. அவரது விண்ணப்பம் தள்ளுபடியாகிவிட்டது. அதற்குதான் 12.6.2014ல் அவருக்கு கடிதம் அனுப்பிவிட்டோம் என தெரிவித்துவிட்டார்.

4.9 அதனையடுத்து 16.9.2014 மற்றும் 17.2.2015ல் விழுப்புரம் மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் செஞ்சியில் மாதந்தோறும் நடைபெறும் குறைதீர்க்கும் கூட்டத்தில் முறையிட்டுள்ளார். மேற்படி மேற்பார்வை பொறியாளர் அவர்களும் நிகழ்ந்த தவறுகளை கருத்தில் கொண்டு செயற்பொறியாளர் அவர்களை விரிவான அறிக்கையொன்றினை அனுப்பச் சொன்னார். அதன் அடிப்படையில் கருணை மனுவாக தலைமைப் பொறியாளர் அவர்களிடம் அவருக்கு தயார் நிலையினைப் பதிவு செய்ய உத்தரவு பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூட சொன்னார்.

4.10 இதற்காக இன்னொரு முறை புதியதாக வருவாய் ஆவணங்களை அளிக்கும்படி 23.2.2015ல் உதவி மின் பொறியாளர் சிட்டாம்பூண்டி கடிதம் அனுப்பியிருந்தார். அவரும்

ஆவணங்களை பெற்று அதற்கான ஜெராக்ஸ் நகல்களை (அலுவலகத்தில் அவரிடம் நேரில் தெரிவித்திருந்தபடி) 3.3.2015ல் பெற்று மறு தினமே சிட்டாம்பூண்டி அலுவலகத்தில் சேர்த்துவிட்டார்.

4.11 7.2.2015ல் நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் அவரது மனு தொடர்பாக நடவடிக்கை எடுக்க மேற்பார்வை பொறியாளர் அவர்களால் செயற்பொறியாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியதின்படி 8.4.2015ல் அவரை வருவாய் ஆவணங்கள் அளிக்கும்படி கடிதம் அவருக்கு அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறான கடிதங்களை 23.2.2015லும் 16.4.2015ல் உதவி மின் பொறியாளரிடமிருந்து தான் வந்தது. 8.4.2015 நாளிட்ட கடிதம் ஏதும் வரவில்லை. எனினும் அவர் புதிய ஆவணங்களை 30.3.2015ல் பெற்று மறுதினமே சிட்டாம்பூண்டி அலுவலகத்தில் கொடுத்துவிட்டார். அதை அவரிடம் பெற்றதை மறைத்து மீண்டும் 16.4.2015ல் சிட்டாம்பூண்டி உதவி மின் பொறியாளர் சாமர்த்தியமாக மீண்டும் கடிதம் அனுப்பியுள்ளார்.

4.12 தன்சிங்(unauthorised absent) என்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பது வேறு அவரது குற்றச்சாட்டுக்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை என்பது வேறு, ஒருமுறை குற்றம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதே நபர் பின்னர் செய்யும் குற்றங்களுக்கும் சேர்த்து தான் என செயற்பொறியாளர் தெரிவிக்கிறார் போலும், எனவே தன்சிங் மீது அவரது குற்றச்சாட்டுக்கு தனியே நடவடிக்கை எடுத்து கட்டாயமாக தண்டிக்கப்படவேண்டும். இதுதான் இயற்கையின் நீதி. தற்போது பணியில் உள்ள ஊழியர்களுக்கும் ஏன் அதிகாரிகளுக்கும் கூட ஒரு படிப்பினையாக இருக்கும்.

4.13 அவர் பெயர் மாற்றம் செய்வதற்குக் கொடுத்த விண்ணப்பங்கள் சிட்டாம்பூண்டியில் பெறப்பட்டு 7.1.2010ல் பெயர் மாற்ற உத்தரவு பெறப்பட்டுள்ளது. அப்போது கொடுத்த ஆவணங்கள் கிடைக்கும்போது அவர் தயார் நிலையைப் பதிவு செய்ய அவரிடம் தன்சிங் பெற்ற ஆவணங்கள், சர்வீசு அக்ரிமெண்ட் இல்லையென்பது பொய்யான தகவலாகும். ஏனெனில்

தன்சிங் மூன்றாவது முறையாக கேட்ட ரூ.1000/. அவர் கொடுக்காமல் போனது தான் உண்மையான காரணமாகும்.

4.14 மேலும், எந்தவொரு விவசாயியும் தனக்கு சர்வீசு உத்தரவு வந்ததும் அந்த பரபரப்பில் அகமகிழ்ந்து வேண்டிய ஆவணங்களையும் (இதர கேட்புகளையும் சேர்த்து) பகுதி அலுவலகத்தில் சேர்த்து விடுகிறானே தவிர ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றமைக்கான சான்று கேட்பதில்லை. ஏனெனில் அரசு அலுவலகங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை(அ) பயம்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சேரானூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சைமுத்து, த/பெ பெ. அய்யாகண்ணு கவுண்டர் அவர்கள் சிறுனாம்பூண்டி கிராம சர்வே எண்.133/4Aல் அமைந்துள்ள கிணற்றிற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் 3HP பம்பு செட்டிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி பதிவு எண்.002/22.4.1987–மூலம் பதிவு செய்திருந்தார்.

5.2 மேற்குறிப்பிட்டுள்ள விண்ணப்ப பதிவின் அடிப்படையில் விண்ணப்பதாரர் தயார்நிலை பதிவு செய்து விவசாய மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ள 90 நாட்கள் அறிவிப்புக் கடிதம் 31.3.2009 அன்று க.எண்.செ.பொ/இப/செஞ்சி/தொநுஉ/வஉ/கோ.சமு/எண்.659/2008 நாள் 31.3.2009 வாயிலாக அனுப்பப்பட்டது. அறிவிப்பு கடிதத்திலுள்ளபடி தயார்நிலை பதிவு செய்ய கடைசி நாள் 8.7.2009 ஆகும்.

5.3 மேற்படி 90 நாள் அறிவிப்புக் கடிதம் அனுப்புவதற்கு முன்பே திரு. பச்சைமுத்து அவர்கள் விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்த நிலபுலன்களை திரு.எம். வெங்கடேசன் த/பெ முருகேச கவுண்டர் அவர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்.

5.4 எனவே, திரு. பச்சைமுத்து அவர்களின் பெயரில் பதிவு செய்திருந்த விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் திரு. எம். வெங்கடேசன் த/பெ முருகேச கவுண்டர் அவர்களின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய ஆவணங்கள் அளித்ததின் அடிப்படையில் செயற்பொறியாளர்/இப/செஞ்சி அவர்களால் 7.1.2010 அன்று பெயர் மாற்ற ஒப்புதல் வழங்கப்பட்டது.

5.5 மேற்கண்ட பெயர் மாற்ற ஒப்புதல் உத்தரவு உதவி மின்பொறியாளர்/இப/சிட்டாம்பூண்டி அவர்களுக்கு புதிய மற்றும் பழைய விவசாய விண்ணப்பங்களுடன் அனுப்பிவைக்கப்பட்டது.

5.6 சிட்டாம்பூண்டி உதவி மின்பொறியாளர் அலுவலகத்தில் அப்போது பணிபுரிந்த திரு. தன்சிங் வணிக ஆய்வாளர் அவர்களிடம் மனுதாரர் தயார்நிலையினை பதிவு செய்ய 3.0 எச்.பி. மோட்டார் பில் மற்றும் கையொப்பம் மற்றும் சுருக்கொப்பமிட்ட டைப் செய்த அக்கிரிமெண்ட்

ஆகியவற்றை உதவி மின்பொறியாளரிடம் காட்டி தயார் நிலையினை திரு. தன்சிங் வணிக உதவியாளர் அவர்களே பதிவு செய்து கொள்வதாகக் கூறி அனுப்பிவிட்டார் என்று மனுதாரர் கூறுகிறார். சிட்டாம்பூண்டி பிரிவு அலுவலகத்தில் மனுதாரர் கொடுத்ததாக சொன்ன ஆவணங்கள் எதுவும் இல்லை.

5.7 பெயர் மாற்றத்துக்காக வட்டாட்சியரிடம் கிணறு சான்று திரு.தன்சிங் வணிக உதவியாளர் வாங்கி வரச்சொல்லியிருந்தார் என்றும் அதை பெற்று சேர்க்கும்பொழுது இன்னுமொரு ரூ.1000/– கேட்டிருந்தார். அதை கொடுக்க அன்று விண்ணப்பதாரரிடம் வசதியில்லாத காரணத்தால் திரு. தன்சிங் அவர்கள் அதை மனதில் வைத்துக்கொண்டே தனது தயார்நிலையைப் பதிவு செய்து விட்டதாகவும் அக்ரிமெண்ட் செய்து விட்டதால் அவரது வரிசை வரும்போது நேரில் அழைத்துமின் இணைப்பு கொடுத்துவிடுவோம் என கூறி திருப்பி அனுப்பிவிடுவார் என்று மனுதாரர் கூறுகிறார். இதுபோன்ற புகார் மனு இதற்கு முன்பு இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

5.8 இந்நிலையில் மனுதாரர் உரிய காலக்கெடுவிற்குள் தயார்நிலையினை பதிவு செய்யாத காரணத்தால் அசல் விவசாய விண்ணப்பம் சிட்டாம்பூண்டி பிரிவு அலுவலகத்திலிருந்து செயற்பொறியாளர்/இப/செஞ்சி அலுவலகத்திற்கு கடித எண். AE/O&M/SPY/ F.6/ D.NO.71/DT.12.7.2013ன் மூலம் திருப்பப்பட்டதை தொடர்ந்து மின்வாரிய LR.NO.SE/ RE&I(D)/EE/RE/A1/F.DOC/D.1529/09, dt.22.9.2009 விதிமுறைப்படி 90 நாள் அறிவிப்புக் கடிதம் முடிவுற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவுற்றதால் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு செயற்பொறியாளர்/இப/ செஞ்சி அலுவலகத்திலிருந்து கடித எண்.செபொ/இப/செ/தொநுஉ/கோ.விவிரத்து/ அஎண்.82/ 2014 நாள் 12.6.2014 இன் படி அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டது.

5.9 16.9.2014 அன்று செஞ்சிகோட்டத்தில் நடைபெற்ற மேற்பார்வை பெறியாளர் அவர்களின் நுகர்வோர் குறைதீர்க்கும் நாளன்று திரு. மு. வெங்கடேசன், தபெ முருகேச கவுண்டர் அவர்கள் மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த விண்ணப்பத்தை ரத்து செய்யாது. மின்இணைப்பு வழங்குமாறு கோரிக்கை விண்ணப்பம் அளித்தார்.

5.10 அம்மனுவினை ஆய்வுசெய்யப்பட்டு உரிய ஆவணங்களை அளித்து உரிய காலக்கெடுவிற்குள் கால நீட்டிப்புப் பெற்று தயார் நிலை பதிவு செய்ய தவறியதால் 90 நாள் நோட்டீஸ் வழங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் வாரிய விதிமுறைப்படி விண்ணப்பம் ரத்து செய்து நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக 10.10.2014 நாளிட்ட கடிதம் மூலம் செயற்பொறியாளர்/இப/செஞ்சி அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

5.11 மீண்டும் 17.2.2015 அன்று செஞ்சி கோட்டத்தில் நடைபெற்ற மேற்பார்வை பொறியாளர் அவர்களின் நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் அன்று திரு. மு. வெங்கடேசன் த/பெ முருகேச கவுண்டர் அவர்கள் ரத்து செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது மின் இணைப்பு வழங்குமாறு கோரிக்கை மனு அளித்தார்.

5.12 மேலும், அம்மனுவினை தான் ஏற்கனவே கடிதம் அளித்துள்ளதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதை தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர்/விழுப்புரம் அவர்கள் இது தொடர்பாக செயற்பொறியாளர்/இப/செஞ்சி அவர்களை உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டார்.

5.13 அதனை தொடர்ந்து இன்றைய தேதியில் வருவாய் ஆவணங்கள் கேட்டு விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டு 8.4.2015 அன்று ஒப்புகை பெறப்பட்டுள்ளது. அனால், இதுநாள் வரை ஆவணங்கள் ஏதும் பெறப்படவில்லை.

5.14 இந்நிலையில் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண்.4/2015 அஎண்.94/2015 நாள் 1.7.2015ன் தீர்ப்பின்படி மனுதாரர் திரு. மு. வெங்கடேசன், த/பெ முருகேச கவுண்டர் அவர்கள் தயார்நிலை பதிவு செய்ய ஆவணம் எதுவும் ஐந்தாண்டுகளுக்குள் கொடுத்துள்ளதாக கூறுவதை மெய்ப்பிக்க ஆதாரம் ஏதுமில்லாத நிலையில் மின் வாரிய விதிமுறைகளின்படி மனுதாரர் விண்ணப்பம் ரத்து செய்ததை மறு பரிசீலனை செய்ய முடியாது என மன்றத்தில் முடிவு செய்யப்பட்டு இறுதி முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 27.10.2015 அன்று மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 திரு. K. குமார் அவர்கள் மேல்முறையீட்டாளர் அவர்கள் சார்பில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 திரு. T. குணசேகரன், செயற்பொறியாளர்/செஞ்சி அவர்கள் எதிர்மனுதாரர் சார்பில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. **<u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளர் பிரதிநிதி திரு.கே. குமார் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. வெங்கடேசன் அவர்கள் அவருடைய பெயருக்கு விணணப்பத்தினை பெயர் மாற்றம் செய்ய அனுமதி கிடைத்துள்ளது என்ற தகவல் தெரிந்தவுடன் அவர் திரு. தன்சிங், அவர்களிடம் மனு ஒன்றில் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும் திரு. தன்சிங் அவர்கள் மின்இணைப்பு பற்றிய தகவல் செஞ்சி அலுவலகத்திலிருந்து நேரடியாக மேல்முறையீட்டாளருக்கு வரும் என்று தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 3HP மின்மோட்டார் வாங்கியமைக்கான ரசீதையும் ஜனவரி மாதமே அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்தார்.

7.3 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி அவர்கள் வருவாய்துறை ஆவணங்களை பெற்று பெயர் மாற்றம் செய்தவர் தயார்நிலையை பதிவு செய்ய முயற்சி செய்யவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் தவறானது என்றும், பெயர்மாற்றம் பெற்றபின்பு மோட்டாரையும் வாங்கிய பின்பு தயார்நிலை பதிவு செய்வதில் விண்ணப்பதாரருக்கு வேறு ஆவணங்கள் எதுவும் தேவையில்லை என்பதை சுட்டிக்காட்டி மேல்முறையீட்டாளர் தயார்நிலையை பதிவு செய்ய தயாராக இருந்தார். ஆனால், வாரிய அலுவலர்கள் தான் அவருடைய தயார்நிலையை பதிவு செய்யாமல் ஏமாற்றி விட்டார்கள் என்றும் வாதிட்டார்.

7.4 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி அவர்கள் மின்மோட்டார் வாங்கி ரசீது மற்றும் தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரும் மனுவின் நகல்கள் ஆகியவற்றை மேல்முறையீட்டாளர் வைத்துக் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

7.5 அவரின் தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரும் விண்ணப்பத்தை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்காமல் வாரிய ஊழியர் ஒருவர் வேண்டும் என்றே செய்த தவறின் காரணமாக ஒரு விவசாயி 1987ம் ஆண்டு பதிவு செய்த விண்ணப்பத்திற்கு 22 வருடம் காத்திருந்து பெயர் மாற்றம் பெற்ற பின்பும் தயார்நிலை பதிவு செய்யவில்லை என்று கூறி

விண்ணப்பத்தை தள்ளுபடி செய்வது நியாயமற்றது என்றும் வாரிய ஊழியரின் தவறுக்கு விவசாயியை தண்டிப்பது தவறு என்றும் வாதிட்டார்.

7.6 மேல்முறையீட்டாளர் தயார்நிலையை பதிவு செய்வதற்கு ரிஜிஸ்டர் எதிலும் தன்னுடைய கையெழுத்தை போடவில்லை என்ற தகவலையும் மின்குறைதீர்ப்பாளரின் கேள்விக்கு பதிலாக தெரிவித்தார். மேலும், அவ்வாறு தயார்நிலையை ரிஜிஸ்டரில் அவரின் கையொப்பத்துடன் பதிவு பண்ண வேண்டும் என்ற விபரமும் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

## 8. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 திரு. T. குணசேகரன், செயற்பொறியாளர்/செஞ்சி அவர்கள் கேட்புரையில் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை மீண்டும் எடுத்துரைத்தார்.

8.2 செயற்பொறியாளர்/செஞ்சி அவர்கள் திரு. வெங்கடேசன் அவர்களின் 24.6.2009 நாளிட்ட மனுவில் கேட்டுக்கொண்டுள்ளபடி, திரு. பச்சைமுத்து அவர்களின் பெயரில் உள்ள விவசாய விண்ணப்பம் 7.1.2010 அன்று திரு. வெங்கடேசன் பெயருக்கு மாற்றம் செய்ய செயற்பொறியாளர்/செஞ்சி அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். விண்ணப்பத்தில் கிணறு இருந்த சர்வே எண். மற்றும் வருவாய் கிராமத்தின் பெயர் தவறாக உள்ளதால் அதற்கான வட்டாட்சியர் சான்று 21.11.2009 அன்று அளிக்கப்பட்டுள்ளதால் 7.1.2010 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

8.3 தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள கால அவகாசம் 8.7.2009ல் முடிவடைந்துள்ளதால் மேல்முறையீட்டாளர், தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் நீட்டிப்பு பெற்ற பின்பு தான் அவர் தன்னுடைய தயர்நிலையை பதிவு செய்ய முடியும். ஆனால், கால நீட்டிப்பு கோரி எந்த விண்ணப்பமும் மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், தயார்நிலையை பதிவு செய்ய கோரி விடுத்த அறிவிப்பு கடிதத்திலுள்ள கெடுநாள் முடிந்து 5 வருடங்கள் வரையிலும் தயார்நிலையை பதிவு செய்ய உரிய கால நீட்டிப்புபெற்று தயார்நிலையை பதிவு செய்யவில்லை என்பதால் வாரிய

விதிகளின்படி அவருடைய விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டு அந்த தகவலும் 12.6.2014 நாளிட்ட கடிதம் மூலம் மேல்முறையீட்டாளருக்கு 6.9.2014 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் பிரதிநிதி அதனை பெற்றுக் கொண்டுள்ளார் என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், விவசாய விண்ணப்பம் அவருடைய பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு சுமார் நான்கு வருடங்கள் 8 மாதங்கள் ஆகிய பின்பு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் வரை தன்னுடைய மின்இணைப்பை பற்றி எந்த உயர் அலுவலரிடமும் அவர் மனு செய்யவில்லை. அவ்வாறு அவருடைய மின்இணைப்பைப் பற்றி விவரம் கோரியிருந்தால் அவர் கால நீட்டிப்பு விண்ணப்பம் செய்யவில்லை என்ற தகவல் கிடைக்கப்பெற்றிருக்கும் என்றும் வாதிட்டார். எனவே, மேல்முறையீட்டாளர் கால நீட்டிப்பு விண்ணப்பம் சமர்ப்பிக்காமல் அவருடைய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு மின்இணைப்பு தரவேண்டும் என்று கேட்பது காலங்கடந்தது என்றும் நியாயமற்றது என்றும் நுகர்வோரின் தவறுக்கு வாரியம் பொறுப்பாகாது என்றும் வாதிட்டார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள் அவர்களது தயார்நிலையை பதிவு செய்துகொள்ள 90 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்படும் கால அவகாசம் எவ்வளவு ?

(ii) மேல்முறையீட்டாளர் அவருடைய தயார்நிலையை அனுமதிக்கப்பட்ட காலகெடுவுக்குள் பதிவு செய்துள்ளாரா ?

(iii) மேல்முறையீட்டாளருக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க முடியுமா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கானதீர்வு</u>**

**10.1** விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி தொகுப்பு (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**10.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் முடிந்த 5 வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். அந்த ஆணையின் தேவையான பத்திகளின் உண்மை நகல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

*"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*
*2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*
*3. Cancelled applications need not be revoked.*
*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**10.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த 5 வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண

வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் 90 நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது (13.12.2010 நாளிட்ட ஆணையின்படி, மேற்கண்ட கால அவகாசம் நிலத்தை வாங்கியவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிகிறது). மேலும் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

10.4 மேற்கண்ட தலைமை பொறியாளர் / திட்டமிடல் 22.9.2009 நாளிட்ட ஆணையின்படி, விவசாய விண்ணப்பங்களின் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார் நிலையை பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவான 90 நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை, விண்ணப்பதாரர் அல்லது அவரின் வாரிசுகள் தங்கள் தயார்நிலையை பதிவு செய்துகொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

**11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

**11.1** மேல்முறையீட்டாளர் அவரின் பெயருக்கு விவசாய மின்சார விண்ணப்பம் மாற்றப்படுவதற்கு செயற்பொறியாளர்/செஞ்சி அவர்களின் அனுமதி பெறப்பட்டுவிட்டது என்று தெரிந்தவுடன் ஜனவரி மாதம் 2010 வருடம் மின்மோட்டார் வாங்கிய ரசீது கப்பசீட்டர் வாங்கிய ரசீது ஆகியவைகளை தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்வதற்காக திரு. தன்சிங் அவர்களிடம் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், ஒப்பந்த பத்திரத்தை (agreement form) stamped paperல் டைப் செய்து கையெழுத்து இட்டு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், தயார் நிலை பதிவு ஏட்டில்(Readiness Register) அவரின் கையொப்பம் பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தயார்நிலை ஒரு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அவரின் கையொப்பம் பெறப்படும் என்பது தனக்கு தெரியாது என்றும் வாதிட்டுள்ளார்.

11.2 மேலும், திரு. தன்சிங் அவர்கள் மேல்முறையீட்டாளரிடம் அவரின் மனு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் என்றும், உயர் அதிகாரியின் அனுமதி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு அனுப்பப்படும் என்றும் அதன்பின்பு அவருக்கு மின்இணைப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார் என்றும் வாதிட்டுள்ளார்.

11.3 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் அவருடைய தயார்நிலையை இதுநாள் வரை பதிவு செய்யவில்லை என்றும் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்திற்கான தயார்நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் பெற்று அந்த 90 நாட்கள் கழிந்து ஐந்து வருடங்களுக்குள் அவரின் தயார்நிலையை பதிவு செய்ய தவறியதால் அவரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு 12.6.2014 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அக்கடித்தை மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி 6.9.2014 அன்று பெற்றுக் கொண்டுள்ளார் என்றும் தெரிவித்தார். மேற்கண்ட கடிதத்தை பெற்ற பின்பு தான் மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின்இணைப்பு வேண்டும் என்று கோருகிறார். எனவே, அவரின் கோரிக்கை காலம் கடந்தது என்றும் வாதிட்டார்.

11.4 இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தின் பதிவு எண்.002/dt.22.4.87 ஆகும். மேற்கண்ட விண்ணப்பத்திற்கு தயார்நிலையை பதிவு செய்ய கோரி, விண்ணப்பம் சமர்ப்பித்த திரு. பச்சைமுத்து த/பெ அய்யாக்கண்ணு சிறுணாம் பூண்டி அவர்களுக்கு 31.3.2009 அன்று 90 நாள் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பின்படி தயார்நிலையை பதிவு செய்ய கடைசி நாள் 8.7.2009 ஆகும்.

11.5 என்னுடைய முதல் வழக்கெழு வினாவிற்கான தீர்வின்படி தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட 90 நாட்கள் அறிவிப்பின் காலக்கெடுவான 90 நாள் முடிந்த நாளிலிருந்து 5 வருடங்கள்வரை கால அவகாசம் வழங்கலாம். அதாவது 7.7.2014 வரை விவசாய மின் இணைப்பு கோரியுள்ள விண்ணப்பதாரர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் உள்ளது என்று தெரிகிறது.

11.6 ஆனால், இந்த மேல்முறையீட்டாளர் 7.7.2014 வரை தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யவில்லை மற்றும் கால அவகாசம் கோரியும் மனு எதுவும் சமாப்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. எனவே, 90 நாள் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட கால கெடுவான 8.7.2009 மற்றும் வாரிய விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட 5 வருடங்கள் காலக் கெடுவான 7.7.2014 வரையிலும் தயார் நிலையை பதிவு செய்யவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 12. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>

12.1 மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் அனுமதிக்கப்பட்ட பின்பு ஜனவரி 2010 ஆண்டில் மின்சார மோட்டார் வாங்கியமைக்கான பில், மற்றும் ஒப்பந்தத்தை stamped papersல் type செய்யப்பட்டு தயார்நிலை பதிவதற்காக திரு. தன்சிங் அவர்களிடம் அளித்துவிட்டதாகவும் மேலும், தயார்நிலை பதிவதற்கான கால அவகாசம் முடிந்து விட்டதால் காலநீட்டிப்பு வேண்டி ஒரு மனுவும் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், திரு. தன்சிங் அவர்கள் வேண்டுமென்றே அவற்றை தன்னுடைய மேலதிகாரிகளுக்கு சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்ததால் தான் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்யப்படாமல் உள்ளது என்று வாதிட்டு வாரியத்தின் அலுவலர் ஒருவர் செய்த தவற்றிற்காக 22 வருடம் வரை காத்திருந்து பெறும் ஒரு விவசாய மின்இணைப்பை அவருக்கு வழங்க மறுப்பது நீதி இல்லை என்றும் வாதிட்டார்.

12.2 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் தயார்நிலையை பதிவு செய்வதற்காக சமர்ப்பித்தள்ளதாக கூறும் ஆவணங்கள் எதுவும் அலவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். தயார்நிலை 90 நாட்கள் அறிவிப்பு முடிந்து ஐந்து வருடங்களுக்குள் தயார்நிலையை பதிவு செய்யப்படாவிடில் அந்த விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாரிய உத்தரவு உள்ளதால் அவ்வாறு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அது வாரியத்தின் ஆணையின்படிதான் என்று வாதிட்டு வாரிய விதிகளின்படி மின்இணைப்பு வழங்க முடியாது என்று வாதிட்டுள்ளார்.

12.3 மேல்முறையீட்டாளர் வாரியத்தின் அலுவலரிடம் தயார்நிலை பதிவு செய்யும் ஆவணங்களையும்கால நீட்டிப்பு கோரும் விண்ணப்பங்களையும் கொடுத்த துள்ளதாக கூறிய பின்பு வருடக்கணக்காக எந்த தகவலும் வரவில்லை என்ற பொழுதும் மேல் அதிகாரிகளை பார்த்து தன்னுடைய விவசாய மின்இணைப்பு விண்ணப்பதின் நிலை என்ன என்பதை விசாரித்திருந்தால் அவரின் ஆவணங்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற உண்மை தெரிந்திருக்கும், மேலும், உரிய ஆவணங்களை சமர்ப்பித்து கால அவகாசம் பெற்று தயார்நிலையை பதிந்து இருக்கலாம். ஆனால், கால அவகாசம் கோரியுள்ளதாக தெரிவித்த காலத்திற்கு பிறகு சுமார் 4 வருடங்கள் 8 மாதங்கள் கழித்து விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த பின்பு மின்இணைப்பு வேண்டும் என்று கூறுவது காலங்கடந்தது என்று வாதிட்டுள்ளார். எனவே, மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின்இணைப்பு வழங்க இயலாது என்று வாதிட்டுள்ளார்.

12.4 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் 90 நாட்கள் அறிவிப்பின்படி 8.7.2009 வரைதான் உள்ளது. ஆனால், பெயர்மாற்றம் கோரும் மனு 24.6.2009 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும்,விண்ணபத்தில் சிறுணாம்பூண்டி கிராமம் சர்வே எண்.133/4B1ல் உள்ள நிலம் மற்றும் கிணறு என்பதற்கு பதில் சிறுணாம்பூண்டி மதுர சேரானூர் கிராம சர்வே எண்.133/4A என்று தவறாக குறிக்கப்பட்டுள்ளது என்பதால் அதனை சரியாக மாற்றுவதற்கு வட்டாட்சியர் செஞ்சி அவர்களின் சான்று 21.11.2009 அன்று பெறப்பட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண். வருவாய் கிராமம் பெயர் மாற்றத்துடன் விவசாய விண்ணப்பம் திரு. பச்சைமுத்து, த/பெ அய்யாக்கண்ணு என்பவர் பெயரிலிருந்து அதன் வரிசைமாறாமல் திரு. வெங்கடேசன் த/பெ முருகேசன் அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்ய அனுமதி 7.1.2010 அன்று செயற்பொறியாளர் செஞ்சி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பெயர் மாற்றம் தயார்நிலை பதிவு செய்வதற்கு கெடு நாளான 8.7.2009க்கு பின்பு பெறப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் பெறுவதற்கு உரிய அலுவலரின் அனுமதிவேண்டும். எனவே, ஜனவரி மாதம் 2010 ஆண்டு பெயர்மாற்ற அனுமதி வந்தவுடன் மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய முடியாது. எனவே, அப்பொழுதே அவர் தயார்நிலையை பதிவு செய்ய ஆவணங்களை சமர்ப்பித்துவிட்டேன் என்று தெரிவித்தாலும் உரிமம்தாரரால் அந்த ஆவணங்களை ஏற்றுக் கொண்டு தயார்நிலையை பதிவு செய்ய முடியாது.

12.5 மேல்முறையீட்டாளர் கால அவகாசம் கோரி மனு ஒன்றில் கையொப்பம் இட்டு திரு. தன்சிங் அவர்களிடம் கொடுத்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், எதிர்மனுதாரர் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

12.6 மேல்முறையீட்டாளர், திரு. தன்சிங்கிடம் ஆவணங்கள் கொடுத்துவிட்டேன் என்றும் கால அவகாசத்திற்கான மனுவிற்கு பதில் நேரடியாக தனக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். ஆனால், அவர் தயார் நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரும் மனுவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதா என்பதையோ, 4 வருடங்களுக்கும் மேலாக பதில் எதுவும் வரவில்லை என்பதையோ அல்லது மின்இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது என்பதையோ உயர் அதிகாரிகளிடம் முறையீடு செய்யாமல் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்ற தகவல் கிடைத்த பின்பு முறையீடு செய்வது காலங்கடந்தது என்ற எதிர்மனுதாரரின் வாதமும் equity aids the vigilant, not those who slumber on their rights என்பதால் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

12.7 மேல்முறையீட்டாளரும் அந்த மனுவின் நகல் மற்றும் தயார்நிலை பதிவு செய்ய கொடுத்த ஆவணங்களின் நகல் அல்லது இவற்றை அந்த அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பதற்கு உரிய அத்தாட்சி ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேல்முறையீட்டாளர் **5.2.2010–ல்** 3HP Motor மற்றும் 1 Kv AR கப்பசிடார் வாங்கிய நியூ ஹார்டு வேர்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ் பில் நம்பர் **469** நகலை அனுப்பியுள்ளார். அது இவ்வலுவலகத்தில் **5.11.2015** அன்று பெறப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆவணம் உரிமம்தாரரின் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

12.8 மேல்முறையீட்டாளர், தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரி சமர்ப்பித்த மனு மற்றும் தயார்நிலையை பதிவு செய்ய கொடுத்துள்ளதாக கூறப்படும் மோட்டார் வாங்கிய பில் மற்றும் ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றை அலுவலகத்தில் சமர்ப்பித்தமைக்கான ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் அவ்வாறு ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்ய முடியாது என்பதால் இந்த மேல்முறையீட்டாளருக்கு நிவாரணம் எதுவும் அளிக்க முடியவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 13. <u>முடிவுரை</u>

13.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கோரும் மனு மற்றும் தயார்நிலையை பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்பதாலும், மனுவையும் மற்ற ஆவணங்களையும் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் கொடுத்துள்ளார் என்பதை உரிய அத்தாட்சி ஆவணங்களுடன் உறுதி செய்ய முடியாததாலும் இந்த மேல்முறையீட்டாளருக்கு என்னால் எந்த நிவாரணமும் வழங்க இயலவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**61/2015** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. M. வெங்கடேசன்
த/பெ முருகேச கவுண்டர்
சேரானூர் கிராமம்,
கோணை அஞ்சல்,
செஞ்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
விழுப்புரம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பவர் அவுஸ் ரோடு,
விழுப்புரம் – 605 602.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.